# நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம்
# Nyborg Tamilsk Sports Klub

## யாப்பு (விதிமுறைகள்)

நியுபோ, 03.01.2010

## § 1: பெயர்

1.1 நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம். (நி.த.வி.க)

## § 2: நோக்கம்

2.1 விளையட்டு சம்பந்தமான உடற்பயிற்ச்சி, போட்டிகள் மற்றும் ஒன்று கூடல்கள் மூலமாக இக் கழகத்தை மேன்மேலும் வளர்த்தெடுப்பதே நோக்கமாகும்.

## § 3: அங்கத்தினர்

3.1 நியுபோ வாழ் தமிழ்மக்கள் மட்டுமே இக்கழகத்தில் அங்கத்தவர் ஆகலாம்.

3.2 மேலும் 13 வயதிற்கு மேற்பட்ட அங்கத்தினர் மட்டுமே பயிற்ச்சி எடுக்கலாம். (23.01.2005)

3.3 இதுவரை நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்தில் அங்கத்தவர்களாக இருக்காத, எந்த விளையாட்டுகளிலும் பங்குபற்றாதவர்கள் மட்டும், புதிதாக விளையாட விரும்புபவர்கள், முதல் 2 தடவைகள் மட்டும் சந்தாப் பணம் கட்டாமல் பயிற்சி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்பு தொடர்ந்து விளையாட விரும்புவோர் சந்தாப் பணம் செலுத்த வேண்டும்.

3.4 சந்தாப்பணம் மாசி 15ம் திகதிக்குள் கட்டியவர்கள் மட்டுமே அங்கத்தினர் என்று கருதப்படும். (17.01.2009)

3.5 சந்தாப்பண விபரம்ஹ (23.01.2005)

| வயது | வருடாந்த சந்தா |
|---|---|
| 13 – 18 வரை | 50 Dkr. |
| 18க்கு மேற்பட்டோர் | 150 Dkr. |

3.6 அங்கத்தினர் கழகத்தை விட்டு விலகும் பட்சத்தில் எழுத்துரீதியாக நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

3.7 அங்கத்தினர் நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்தின் சட்டதிட்டகளுக்கு மதிப்புக் கொடுத்து இருத்தல் வேண்டும்.

3.8 மேலும் கழகத்தின் சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், அவர்கள் அங்கத்தவர் உரிமையை இழக்கப்படுவார்கள்.

3.9 சந்தா செலுத்திய அங்கத்தினர், கழகத்தின் அனைத்து விளையாட்டுகளிலும், போட்டிகளிலும் மற்றும் ஒன்று கூடல்களிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.

3.10 மேலும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களை, அதற்குரிய அணித்தலைவர் மட்டுமே தெரிவு செய்வார். பயிற்சியின் போதும் சகலவிடயங்களும் அணித்தலைவர்களே முடிவெடுப்பார்கள். (07.01.1996)

3.11 நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்தால் கலந்து கொள்ளாத பட்சத்தில் இக் கழகத்தின் வீரர்கள் வேறு அணிகளுடன் சேர்ந்து விளையாட அனுமதிக்கப்படுவார்கள். (07.01.1996)

3.12 நி.த.வி.க சம்பந்தப்படும் போட்டிகளில் அவர்களை எதிர்த்து வேறு அணியில் சேர்ந்து விளையாடும் எமது கழக வீரர்கள், எமது கழகத்திலிருந்து முற்றாக விலக்கி வைக்கப்படுவார்கள். (07.01.1996)

3.13 போட்டிகளின்போதும் பயிற்சிகளின்போதும் தவறும் பொருட்களுக்கு அதில் பங்குகொள்ளும் அனைத்து வீரர்களுமே பொறுப்பாவார்கள். (07.01.1996)

## § 4: கழகத்தின் அமைப்பு

4.1 பொதுக்கூட்டம் தைமாதத்தில் கூடப்பட்டிருக்க வேண்டும். மற்றும் பொதுக்கூட்டம்தான் கழகத்தின் அதியுயர்ந்த அதிகாரபீடமாகும். விதிமுறைகள் பொதுக்கூட்டத்தில் மட்டுமே முடிவெடுக்கப்படும்.

4.2 பொதுக்கூட்ட அழைப்பு நியுபோ வாழ் அனைத்து தமிழ்மக்களுக்கும் சென்றடைதல் வேண்டும்.

4.3 பொதுக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்ஹ

- *தலைவர் உரை*
- *செயலாளர் அறிக்கை*
- *பொருளாளர் அறிக்கையும் வரவு செலவு, இருப்பு கணக்குகளை ஆமோதித்தல்.*
- *மற்றும் குழுதலைவர்களினதும் நிர்வாக நடத்துனர்களினதும் உரை.*
- *வேறு விடயங்கள் (குறை, நிறைவுகளை கலந்துரையாடல்)*
- *தற்காலிக தலைவர் தெரிவு.*
- *புதிய நிர்வாகசபைத்தெரிவு.*
- *நிறைவேற்றப்படும் புதிய தீர்மானங்கள் பற்றி ஆராய்தல்*

4.4 இருக்கும் சட்டதிட்டங்களை மாற்றி அமைக்கவோ, அல்லது புதிதாக ஆலோசிக்கப்படும் தீர்மானங்களை முடிவெடுப்பதற்கோ, பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் 2/3 க்கு மேற்பட்டோர் ஆமோதித்தல் வேண்டும்.

4.5 நிர்வாக அங்கத்தவர் தனது இயங்கும் காலமுடிவுக்கு முன்னர் நிர்வாகத்தை விட்டு விலகினால், மீதியுள்ள நிர்வாக அங்கதவர்கள் விலகியோரின் பொறுப்பையும் ஏற்று, தொடர்ந்து இயக்கவேண்டும்.

4.6 நாளாந்த பொறுப்புகளை நிர்வாகத்தினர் பக்கசார்பற்று எடுக்கப்பட்ட சட்டதிட்டங்களின் கீழ் கொண்டுநடத்தல் வேண்டும்.

4.7 அவசர பொதுக்கூட்டம் கூடுவதாயின், நிர்வாகமோ அல்லது குறைந்தது 20 சதவீத அங்கத்தவர்களோ முடிவெடுக்கவேண்டும். அத்துடன் 8 நாட்களுக்கு முன்னர் அதை அறிவித்திருத்தல் வேண்டும்.

4.8 நியுபோ நகரில் நடைபெறும் பொதுநிகழ்ச்சிகளின் போது முதல் நாள் பயிற்சிகள் நடைபெறமாட்டாது. (08.01.2000)

4.9 (நிர்வாக அங்கத்தவர்கள் முடிவெடுத்து கழகத்தின் இருப்பில் உள்ள நிதியை, 1 சதவீத வட்டிக்கு ஏதாவது ஒரு அமைப்பிற்கு கொடுக்கலாம். இதற்கு நிர்வாக அங்கத்தவர்களே பொறுப்பு. (13.01.2002))

4.10 (நி.த.வி.க ஏதாவது பொது அமைப்புகளுக்கு நன்கொடை வழங்குவதாயின் வருடத்திற்கு 500 Dkr. மட்டுமே வழங்கலாம். நிர்வாகம் எந்த அமைப்புக்கு கொடுப்பதென்று முடிவெடுக்கும். (17.01.2004))

4.11 விளையாட்டு சம்பந்தமான விழாக்களிலும், ஒன்றுகூடுதல்களிலும், விழையாட்டுப்போட்டிகளிலும் மதுபானம் கொண்டுவருவதும் அருந்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. (17.01.2009)

4.12 ஒவ்வொரு வருடமும் பங்குனி 1ம் திகதிக்குள் பொருளாளர், அரசாங்க தொடர்பாளருக்கு மொத்த அங்கத்தவரின் பெயரும், பிறந்த திகதி, மாதம், ஆண்டு விபரம் கொடுக்கப்படவேண்டும். (17.01.2009)

4.13 ஒவ்வொரு அணித்தலைவரும் தங்கள் தங்கள் வீரர்கள் சந்தாப்பணத்தை மாசி 15ம் திகதிக்குள் கட்ட வைப்பது அவர்களது பொறுப்பாகும். கட்டாவிடின், அந்த அணித்தலைவர் நிர்வாகத்திற்கு அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

4.14 வெளியூரில், அதாவது Jylland மற்றும் Sjællandல் மட்டும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் வீரர்களுக்கு போக்குவரத்து உதவியாக ஒரு மோட்டார்வண்டிக்கு (கார்) 250 Dkr. கொடுக்கப்படும். பாலவரி கட்டவேண்டிய நிர்ப்பந்தத்தில், அதுவும் கொடுக்கப்படும்.

4.15 www.nyborgtamil.dk என்ற கணனியில் நியுபோவில் நடாத்தப்படவிருக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளலாம்.

## § 5: நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் கலைதல்

5.1 இக் கழகம் கலையும் நிலை ஏற்படுமாயின், வருடாந்த பொதுக்கூட்டத்தில் வருகை தந்தவர்களில் 2/3 க்கு மேற்பட்டோரின் ஆமோதித்தலோடு மட்டும்தான் கலைக்கப்படும்.

5.2 தற்சமயம் இக் கழகம் மேற்குறிப்பிட்டபடி கலைந்துவிட்டால், கழகத்தின் வங்கி இருப்பு நிதி 2 வருடங்களுக்கு தடைசெய்யப்பட்ட இருப்பில் செலுத்தப்படும்.

5.3 ஆனால் 2 வருடங்களுக்குள் மீண்டும் நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் உருவாக்கம் பெற்றால், வங்கியில் இருந்து நிதியை பெற்றுக்கொள்ளலாம்.

5.4 2 வருடங்களுக்குள் புதிய விளையாட்டுக் கழகம் அமையாத பட்சத்தில், அத்தொகை நியுபோ உள்ளூராட்சி மன்றத்தின் விளையாட்டுத்துறையைச் சேரும்.

## § 6: பயிற்சிநேரம்

6.1 மதுபோதையில் வரும் விளையாட்டு வீரர்கள், எந்தவித பயிற்ச்சிகளிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். (17.01.2009)

6.2 குளியலறையிலும், உள் அரங்குகளிலும் புகைப்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. (17.01.2009)

6.3 பயிற்சிகளின்போது ஏதாவது தவறுதலாக விளையாட்டு அரங்குளில் நடைபெறும் சேதங்களை மட்டும் நி.த.வி.க பொறுப்பேற்கும். ஏனைய தனிப்பட்டவர்கள் செய்யும் சேதங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவார்கள். (05.01.1999)

6.4 பயிற்சிநேரத்தின் போது 13 வயதிற்கு உற்பட்டவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் துணையின்றி தனியாக மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். (22.01.2006)

6.5 பூப்பந்து, கரப்பந்து மற்றும் உதைப்பந்தாட்ட விளையாட்டுகளுக்கு, 13 வயதிற்கு உட்பட்டவர்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் துணையின்றித் தனியாக மைதானத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். இது Borgeskovskoleல் மட்டும். (12.01.2006)

6.6 பயிற்சிநேர விபரம்ஹ

| | திங்கள் | வியாழன் | வெள்ளி | ஞாயிறு |
|---|---|---|---|---|
| பூப்பந்தாட்டம் | 17.00 – 18.00 *(1)* | 18.00 – 21.00 *(1)* | 18.30 – 20.30 *(2)* | 14.00 – 21.00 *(1)* |
| கரப்பந்தாட்டம் | | | | 17.30 – 21.00 *(1)* |
| உதைப்பந்தாட்டம் | | | 20.30 – 22.00 *(2)* | |

*(1) Borgeskovskole, (2) Skovparksskole*

6.7 விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக நிர்வாகத்தால் சோடா வாங்கிக் கொடுத்தல் வேண்டும்.